பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**26 02 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - இஸ்ரேல் இடையேயான உறவை வலுப்படுத்துவதில் சிறப்பாக பங்களித்ததை அங்கீகரிக்கும் விதமாக "Speaker of Knesset Medal" என்ற விருதை பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இஸ்ரேல் அரசு வழங்கி கௌரவித்துள்ளது.

2. ஹோலி பண்டிகையை ஒட்டி நாடு முழுவதும் இன்று முதல் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

3. இந்தியா - நேபாள் இடையே பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

4. ஈரான் - அமெரிக்கா இடையே அணுசக்தி தொடர்பான 3வது சுற்றுப் பேச்சுகள் ஜெனிவாவில் இன்று நடைபெறுகிறது.

5. ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் - காலிறுதிக்கு முந்யை சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - இஸ்ரேல் இடையேயான உறவை வலுப்படுத்துவதில் சிறப்பாக பங்களித்ததை அங்கீகரிக்கும் விதமாக “Speaker of Knesset Medal” என்ற விருதை பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இஸ்ரேல் அரசு வழங்கி கௌரவித்துள்ளது.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பிரதமர் உரையாற்றிய பிறகு இந்த விருதை அந்நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் திரு. அமீர் ஓஹானா வழங்கினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மை மற்றும் இருதரப்பு வளர்ந்து வருவதை இந்த அங்கீகாரம் குறிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் உயரிய விருதைப் பெறும் முதலாவது தலைவர் பிரதமர் திரு. நரேந்திர மோடி என்றும் அவர் கூறுகிறார்.

பிரதமருக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த கௌரவத்திற்காக அவருக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த கௌரவம் மூலம் இது ஒவ்வொரு இந்தியரும் பெருமைப்படும் தருணம் என்று கூறியுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியா - இஸ்ரேல் இடையேயான கூட்டாண்மையை முன்னெடுத்துச் செல்வதில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தனித்துவமான பங்களிப்புக்கு இது உரிய அங்கீகாரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் இரண்டு நாள் பயணம் மேற்கொள்வதற்காக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நேற்று ஸ்ரீநகர் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா உள்ளிட்டோர் அவரை வரவேற்றனர்.

மாலையில் மக்கள் மாளிகையில் நடைபெற்ற கலாச்சார நிகழ்ச்சிகளை அவர் பார்வையிட்டார்.

கஷ்மீர் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற உள்ள பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக அவர் கலந்துகொள்கிறார்.

குடியரசு துணைத்தலைவரின் வருகையை ஒட்டி ஸ்ரீநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஹோலி பண்டிகையை ஒட்டி இந்திய ரயில்வே சிறப்பு ரயில்களை இயக்க உள்ளது.

பல்வேறு ரயில்வே மண்டலங்களில் இன்று முதல் அடுத்த மாதம் 18ஆம் தேதி வரை சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

தேவையின் அடிப்படையில் கூடுதல் ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

கிழக்கு மத்திய ரயில்வே சார்பில் 50 சிறப்பு ரயில்களும், வடக்கு ரயில்வே சார்பில் 48 ரயில்களும், மத்திய ரயில்வே சார்பில் 20 ரயில்களும் இயக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ரயில்வே மண்டலம் சார்பில் 32 ரயில்வே சிறப்பு ரயில்களும், தென்கிழக்கு ரயில்வே சார்பில் 28 சிறப்பு ரயில்களும்

ஹோலி பண்டிகையை ஒட்டி இயக்கப்பட உள்ளதாக ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

இந்தியா - நேபாள் இடையே வனம், வன உயிரினம், சுற்றுச்சூழல், உயிரி பன்முகத்தன்மை பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ், நேபாள் வனத்துறை அமைச்சர் திரு. Madhav Prasad Chaulagain முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

<<<<>>>>

ரயில்வே ஓய்வூதியதாரர்களின் தனிப்பட்ட மற்றும் நிதி விவரங்களை குறுஞ்செய்தி அல்லது இணையதளம் வாயிலாகவோ கேட்கப்படுவதில்லை என்று ரயில்வே அமைச்சகம் விளக்கமளித்துள்ளது.

ரயில்வெ அதிகாரிகளின் பெயரில் KYC சரிபார்த்தல், கூடுதல் ஓய்வூதிய பயன் உள்ளிட்டவை தொடர்பாக குறுஞ்செய்தி, வாட்ஸ்அப் செயலி மூலமும், தொலைபேசி அழைப்பின் மூலமும் போலியாக

தகவல் கேட்கப்படுவதையடுத்து ரயில்வே அமைச்சகம் இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

ஓய்வூதியதாரர்களின் வங்கி விவரங்கள், **OTP** எண்கள், பாஸ்வேர்ட் ஆகியவற்றை தொலைபேசி, குறுஞ்செய்தி, வாட்ஸ்அப் அல்லது சமூக வலைதளம் வாயிலாக கேட்பதற்கு எந்த ரயில்வே அதிகாரிகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்று கூறியுள்ளது.

இதையடுத்து ஓய்வூதியதாரர்களும், அவர்ளது குடும்பத்தினரும் இந்த மோசடிக்கு எதிராக எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சந்தேகத்திற்குரிய தொலைபேசி அழைப்போ அல்லது குறுஞ்செய்தியோ வந்தால் உடனடியாக காவல்துறையின் சைபர் பிரிவுக்கும் சம்பந்தப்பட்ட நிர்வாக அலுவலகத்திற்கும் புகார் தெரிவிக்கமாறு ரயில்வே அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

இஸ்ரேலில் பயணம் மேற்கொண்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டுப் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவுடன்

இணைந்து தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை எடுத்துரைக்கும் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஜெருசலேமில் நடைபெற்ற இக்கண்காட்சியில் செயற்கை நுண்ணறிவு, சுகாதார தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு, நீர் வேளாண்மை, பருவநிலை தொழில்நுட்பம், எரிசக்தி, விண்வெளி உள்ளிட்ட துறைகளில் இஸ்ரேல் நாட்டின் அதிநவீன தொழில்நுட்பங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி பார்வையிட்டதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் இதுவரை 28 லட்சத்திற்கும் அதிகமான மின்சார வாகனங்கள் விற்பனையாகி உள்ளதாக கனரக தொழில்துறை அமைச்சர் திரு. ஹெச்.டி. குமாரசாமி கூறியுள்ளார்.

புதுதில்லியில் மின்சார வாகனங்கள் குறித்த தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், இதில் 20 லட்சம் இருசக்கர மின்சார வாகனங்களும், 3 லட்சம் மின்சார 3 சக்கர வாகனங்களும் அடங்கும் என்று தெரிவித்துள்ளார்.

முக்கிய நகரங்களில் **14** ஆயிரத்துக்கும் அதிகமான மின்சார பேருந்துகள் இயக்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதன் மூலம் பொதுப் போக்குவரத்திலும் மின்சார பயன்பாடு விரைவுபெறுவதாக திரு. ஹெச்.டி. குமாரசாமி கூறியுள்ளார்.

<<<>>>>

பாஃப்தா திரைப்பட விருதுகளில் சிறந்த குழந்தைகள் மற்றும் குடும்ப திரைப்பட பிரிவில் விருது வென்ற **Boong** திரைப்பட தயாரிப்பாளர் லக்ஷ்மி ப்ரியா தேவிக்கும், படக்குழுவினருக்கும் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த சிறப்பு மிக்க சாதனை இந்திய திரைப்படத்துறைக்கு பெருமையான தருணம் என்று கூறியுள்ளது.

<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையிலான குழுவினர் இன்றும் நாளையும் சென்னையில் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி முறையற்ற பணப் பரிமாற்றம் மற்றும் தேர்தல் செலவினங்களைக் கண்காணிக்க வருமான வரித்துறையின் புலனாய்வுப் பிரிவு சார்பில் 24 மணி நேர கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி தனிநபரோ அல்லது அரசியல் கட்சியினரோ வாக்காளர்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவற்றை விநியோகித்தால் அதுகுறித்து கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தெரிவிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

தகவல் அளிப்பவரின் விவரங்கள் ரகசியம் காக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த புகார்களை 1 8 0 0 4 2 5 6 6 6 9 என்ற தொலைபேசி எண் மூலம் அல்லது tn.electioncomplaints2026@incometax.gov.in என்ற மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரான் - அமெரிக்கா இடையே அணுசக்தி தொடர்பான 3வது சுற்றுப் பேச்சுகள் ஜெனிவாவில் இன்று நடைபெறுகிறது.

ஈரானில் எண்ணெய் வர்த்தகம் மற்றும் ஆயுத கட்டமைப்புகள் மீது அமெரிக்கா புதிய தடைகளை விதித்துள்ள நிலையில் பேச்சு நடைபெற உள்ளது.

இதற்கிடையே இப்பேச்சுகளுக்கு முன்னதாக தாம் நம்பிக்கையுடன் இருப்பதாகவும், இரு நாடுகளுக்கு இடையே நீண்ட காலமாக நிலவி வரும் மோதலை முடிவுக்கு கொண்டுவர இது திருப்புமுனையாக இருக்கும் என்றும் ஈரான் அதிபர் திரு. மசூத் பெசஸ்கியன் தெரிவித்துள்ளார்.

ஈரானின் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், திரு. அயத்துல்லா அலி கமேனியின் வழிகாட்டுதலின் பேரில் பேச்சுகளில் ஈடுபடுவதாகவும் ஈரான் அதிபர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் - காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், **21-12, 21-11** என்ற செட் கணக்கில் போலந்தின் **Mikolaj Szymarowski**-ஐ வென்றார்.

--------------

**உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று ஜிம்பாப்வே-யை எதிர்கொள்கிறது.**

**<<<<The End>>>>**